[திரு. சி. ஞானசேகரன்] [2011 பிப்ரவரி 8

முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 இலட்சம் ரூபாயும், காயமுற்று மருத்துவமனையிலே சிகிச்சை பெறக்கூடிய திரு. கார்த்திகேயன், லாவண்யா, பாஸ்கரன், ஷிவாணி, பூபாலன் ஆகியோருக்கு குறைந்தபட்சம் தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கி, அந்தக் குடும்பத்திற்கு நிவாரணத்தை அளிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் (8-2-2011) விடியற்காலையில், வேலூர் மாவட்டம், நமது சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தொகுதிக்கு உட்பட்ட கழிஞ்சூர் மதுரா கோபாலபுரம், ஜான் சாலமன் காலனியில், கதவிலக்கம் 4-ஆம் எண் உள்ள வீட்டில் குடியிருக்கும் திரு. கார்த்திகேயன் அவர்களுக்குச் சொந்தமான இல்லத்தில், எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் வீடு இடிந்து விழுந்ததோடு, அந்த வீட்டில் குடியிருந்த ஒன்பது நபர்களில் ஐந்து பேர் அங்கேயே மடிந்திருக்கிறார்கள். மற்றவர்கள் படுகாயமடைந்த நிலையிலே மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சம்பவம் குறித்து திரு. ஞானசேகரன் மாத்திரமல்ல; சட்டத் துறை அமைச்சர் அவர்களும் எனது கவனத்திற்குக் காலையிலேயே கொண்டு வந்துள்ளார்.

விபத்தில் சிக்கி மாண்டவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, காயமடைந்து மருத்துவமனையிலே உள்ளவர்கள் விரைவில் நலம் பெற்று இல்லம் திரும்ப வேண்டுமென்றும் எனது விழைவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும், காயமடைந்தவர்களுக்குத் தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.